2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

201—

அம்மா மருந்தகம்

***9191—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் 'அம்மா மருந்தகம்' அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை நகரில் கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் மூலமாக 'அம்மா மருந்தகம்' துவக்குவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நினைவுகளிலும், கனவுகளிலும் என்றும் நிறைந்திருக்கும் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சிறப்பான முறையில் ஆட்சி செய்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அவருக்கு என்றும் உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும்*

2018 ஜூன் 25]

வணங்குகிறேன். ஆனைமலை ஆற்றில் படர்ந்திருந்த ஆகாயத் தாமரையை அகற்ற வேண்டுமென்ற நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, ஆற்றைச் சுத்தம் செய்யுமாறு பேரூராட்சிக்கு உத்தரவிட்ட எங்களுடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறையிலுள்ள மக்கள், தேயிலைத் தோட்டங்களில் கூலி வேலை செய்பவர்கள். அவர்களுக்கு அவ்வளவு வசதி கிடையாது. 'அம்மா மருந்தகம்' ஒன்றை அங்கு அமைத்துத் தந்தால், அம்மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். எனவே, பரிசீலனை செய்து உடனடியாக அங்கு 'அம்மா மருந்தகம்' அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் 'அம்மா மருந்தகம்' அமைத்துத் தர பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். வால்பாறை தொகுதியைப் பொறுத்தளவில், அங்கு ஏற்கெனவே 10 மருந்தகங்கள் இருக்கின்றன. அங்கு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியிலுள்ள தேயிலைத் தோட்டங்களிலேயே இலவச மருத்துவ வசதியோடு, அங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கு மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மூலமாக 'அம்மா மருந்தகம்' ஒன்றை வால்பாறையில் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியாகப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுதியாக அமைக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆனைமலையிலும் அம்மா மருந்தகத்தை அரசு அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்கிற தாரக மந்திரத்தோடு தவ வாழ்க்கை வாழ்ந்து, நம் தமிழக மக்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று, இன்று நம்மிடத்திலே இல்லையென்றாலும், நம்முடைய மக்கள் மனதில் என்றைக்கும் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மா அவர்களின் அனைத்துத் திட்டங்களையும் தமிழக மக்களுக்குக் கொண்டு சேர்க்கின்ற வகையில், 24 மணி நேரத்தில், 18 மணி நேரம் அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். அவருக்கு உறுதுணையாக நின்று பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, தங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலைப் பகுதி, 100–க்கு 99 சதவிகிதம் மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். அங்கு 14 ஊராட்சிகள் இருக்கின்றன. அங்கு வாழும் ஏழையெளிய மக்கள் அனைவரும் விவசாயத்தையும், விவசாயத்தைச் சார்ந்த கூலித் தொழிலையும் நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள், மலைப் பகுதி மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, பல்வேறு சலுகைகளை செய்து கொடுத்திருக்கின்றார்கள். குறிப்பாக, அங்கே சில குக்கிராமங்களில் நடந்து சென்று நியாய விலைக் கடைகளில் பொருட்களை வாங்குகின்ற நிலையை மாற்றி, கூட்டுறவுத் துறையின் வாகனங்கள்

2018 ஜுன் 25]

மூலமாக அந்தப் பகுதிகளுக்கு பொருட்களைக் கொண்டு சென்று வழங்குகின்ற நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள். அதன் அடிப்படையில் அங்கே கொல்லிமலையின் தலைமையிடமான செம்மேடு பகுதியில் அம்மா மருந்தகம் அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் நலம் பெறுவார்கள். எனவே, செம்மேடு பகுதியில் அம்மா மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாக இருப்பதால், அங்கு அம்மா மருந்தகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார். குறிப்பாக, இந்த அம்மா மருந்தகங்களை நடத்துவதில் சிரமம் என்னவென்றால், Pharmacists மூலம்தான் அந்தக் கடைகளை நடத்த முடியும். Pharmacists–ஐ பணியமர்த்துவது மிகக் கடினமாக இருக்கிறது. அதுவும் கிராமப்புறங்களில் Pharmacists மலை ஏறி வந்து வேலை பார்ப்பது என்பது அரிதாக இருக்கிறது. மேலும், இந்த Pharmacists–ஐ பணியமர்த்தினாலும், அவர்களுக்குக் கூடுதலாகச் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது; போக்குவரத்து வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டியிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைக் கருத்தில்கொண்டு— மக்களுக்குத் தரமான மருந்துகள் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் 2014–2015 ஆம் ஆண்டில் இதுபோன்ற கடைகளைத் தொடங்கினார்கள். அந்த அடிப்படையில், இன்றைக்கு ஏறத்தாழ 111 அம்மா மருந்தகங்கள் செயல்படுகின்றன. இது தவிர, 180 கூட்டுறவு மருந்தகங்களும் செயல்படுகின்றன. இந்த மருந்தகங்களின் மூலமாக ஏறத்தாழ 700 கோடி ரூபாய் அளவிற்கு மருந்துகள் விற்பனையாகியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த மலைப் பகுதியில் இலவசமாகவோ அல்லது குறைந்த வாடகையிலோ கட்டடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்து தரும்பட்சத்தில், கூட்டுறவுத் துறையின் மூலமாக ஆய்வு செய்து,*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு அதனை எடுத்துச் சென்று அம்மா மருந்தகம் ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

202—

பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துதல்

***11211—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் மற்றும் முடிச்சூர் ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தொகுதிக்குட்பட்ட அகரம்தென் மற்றும் முடிச்சூர் ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாகத் தரமுயர்த்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "தரமுயர்த்தும்*